
மனக்காடு
மேரா

# மனக்காடு

(கவிதைத் தொகுதி)

மேரா

பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக
அபிவிருத்தி ஒன்றியம்.

மனக்காடு

கவிதைகள்

மேரா

முதல் பதிப்பு: 2012, ஆனி

வெளியீடு: பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக

அபிவிருத்தி ஒன்றியம்.

அச்சகம் : லோயல் பிரின்டர்ஸ்

பக்கம்: 68

நூல் வடிவமைப்பு: சங்கர்.ரி, மல்ரி விஷன்

அட்டைப்படம்: பா.புஸ்பகாந்தன்

விலை:175/-

ISBN - 978 - 955 - 53621 - 1 - 5

*Manakkaadu*

*poems*

*Mera*

*megarajaht@yahoo.com,*

*www.megarajah.blogspot.com*

*First Edition:June,2012*

*Published By: Paddippalai Area Art Literature Social*

*Development Organisation*

*Printed by:Loyal Printers, 125, New moors Street ,Colombo 12.*

*Designed By: Shankar.T, Multivision*

*Pages: 68*

*Price:175/-*

இது,

யுத்தம் தீண்டிய ரத்த

உறவுகளின் நினைவால்

மீண்டும் மீண்டும்

இறக்கும் உறவுகளுக்கு.

# கவிஞர் ராஜாத்தியின் குறிப்பு

கவிஞர் மேரா அவர்களுடைய "மனக்காடு" கவிதைத் தொகுப்பிற்கு குறிப்பெழுத ஆரம்பிக்கும் பொழுது அவர் பற்றிய எனது பதிவுகளை முதலில் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

கவிஞர் மேராவை எனக்கு தெரிய வந்தது குறுகிய கால இடைவெளியிலேதான். முதன்முதலில் அவருடன் தொலை பேசியினூடாகவே சம்பாசித்தேன். எனக்கு பட்டிப்பளை பிரதேச செயலாளராக இடமாற்றம் கிடைத்ததையறிந்து தொலை பேசியில் தொடர்பு கொண்ட மேரா தன்னை அறிமுகம் செய்து விட்டு "சேர் வாருங்கள் சேர்ந்து வேலை செய்வோம்" என்றார். அதன் போது அவரது பொதுச்சேவை மீதான ஆர்வம் தெரிந்தது எனக்கு.

கடந்த இருமாதங்களுக்குள்ளேயே இவரை நான் நேரில் சந்திக்க கூடியதாகவிருந்தது. ஆனாலும் இவரை நேரில் சந்திக்க முன்னரே இவரது சில கவிதைகளை பார்த்திருக்கின்றேன். அவை அவர்வாழும் சமூகம் பற்றிப் பேசியபோது அவரை நேரில் சந்திக்க வேண்டுமென எண்ணியிருந்தேன். சந்தர்ப்ப வசமாக நான் பட்டிப்பளைப் பிரதேச செயலாளராக இடம்மாற்றம் பெற்றுச் சென்றதனால் எங்கள் சந்திப்பு விரைவாக ஏற்ப்பட்டு விட்டது.

தமிழ் மொழியில் சிறப்புப்பட்டம் பெற்ற கவிஞர் மேரா தமிழ் மொழியின் பாலும் தமது சமூகத்தின் பாலும் அக்கறை கொண்ட சமூக சீரழிவுகளை கண்டு சினம் கொள்பவராகவும் தனது சார்பாக எதையாவது சமூகத்துக்கு செய்து விடவேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்ட இளைஞர். தான் அறிந்த விடயங்களை பிறருடன் பகிர்ந்து கொள்வதிலும் தமது சமூகத்தின் மத்தியிலே

படைப்பாற்றலை ஊக்கப்படுத்துவதிலும் முனைப்போடு செயற்படுபவர். இதற்கு சான்றாக இவரும் நண்பர்களும் இணைந்து உருவாக்கிய பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினூடாக வெளியிடப்பட்ட மெல்லப் பறத்தல் (2011) ஆய்வரங்கக் கட்டுரைகள் (2011,2012) தொகுப்புக்களும் முகவரி சஞ்சிகை(2012), தைத்திருநாள் சிறப்புக்கவியரங்கு(2012) எனும் மென்தட்டும் கடந்த இரு ஆண்டுகளாக இவ்வமைப்பு நடாத்திவரும் மண்கமழும் மங்கல விழாவும் எடுத்துக்காட்டு. படைப்பாளிகள் அனைவருமே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாகவிருந்தால் எமது சமூகம் படைப்பாற்றல் கொண்ட சமூகமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த பத்தாண்டுகளாக கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டுள்ள மேரா இதுவரை ஈழப்பித்தன், அரசையூரான், அரசையூர் மேரா, மாரிமகன் எனும் புனை பெயர்களிலும் கவிதை எழுதியுள்ளார். இவர் ஏற்கனவே கலங்கிய வானம்(2005),காலத்தின் காயங்கள்(2007) எனும் இரு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

"மனக்காடு" என்பது இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பிலே மொத்தமாக 33 கவிதைகள் காணப்படுகின்றன. இவை அனைத்துமே அன்றாட வாழ்க்கை அனுபவங்களை கவிதைகளாக்கும் முயற்சியாகவே அமைந்திருக்கின்றன.

வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளும், நம்பிக்கைகளும், ஆசைகள் - நிராசைகளும், விரக்தியும் மாறிமாறி இவரது கவிதைகளில் ஒலிக்கிறது. போராட்டங்களும் சவால்களும் நிறைந்த வாழ்வை எதிர் கொள்வதும் அவற்றிலிருந்து மீண்டுவருவதற்கான முனைப்பையும் காட்டுவனவாக அமைகின்றன. உதாரணம்

"எனினும்
பற்று அறா
மண்ணின் பிடிப்பில்
வாழ்தல் பற்றிய

புதிய கற்பிதங்களோடு
மீண்டும்
நிமிர்கிறது" (பக்.28)

இவரது பல கவிதைகளிலே மேலோங்கி நிற்கின்ற இன்னுமொரு விடயம் மனித நேயமும் தன்னையொத்த ஏனைய அனைத்து உயிர்கள் மீதுமான நேயமுமே. தன்னைப் போல பிறரையும் நேசிக்கின்ற மனித நேயம் தெளிவாக தெரிகின்றது.

தவிர்க்கமுடியாத வண்ணம் அண்மைக்கால கவிஞர்களது கருவாக கொள்ளப்படும் போர்க்கால வாழ்வும் அதன் விளைவுகளும் தாக்கங்களும் இவரது கவிதைகளிலும் எதிரொலிக்கின்றன. போரினால் ஏற்ப்பட்ட இழப்புக்களை எண்ணி ஏங்கும் உள்ளத் தவிப்பும் இவரது கவிதைகளில் தெரிகின்றது. உதாரணம்

எனக்குள்
எப்போதும் இருக்கும்
என் நண்பன்
இனி ஒருபோதும் வரமாட்டானென்று
இப்போது எனக்கு
உறுதியாகத் தெரியும்.. (பக்.23)

சமூக விமர்சனங்களும் இவரது கவிதைகளின் கருப்பொருளாக அமைந்துள்ளதும் இங்கு குறித்துக்காட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். தேர்தல் பற்றிய இவரது கவிதையொன்று அரசியல் வாதிகளது ஏமாற்றுத் தனத்தினை விளம்பி நிற்கின்றது.

வெளுக்கும் வெயிலில்
வெந்து வாடி வருகின்றீர்.
போன தேர்தலுக்குப்பின் இந்தமுறை.
உறவை விசாரிக்கஅல்ல
வாக்கு வேட்டையாடி..
நீங்கள் வராத நாட்களில்
என்பாட்டனும்
குழந்தை மச்சானும் குண்டுபட்டு இறந்தது
உங்களுக்குத் தெரியுமா. (பக்.50)

என வேதனையுடன் கேட்கின்றார் கவிஞர்.

கவிதைகளை அதிகம் சோடிக்காமல் நேரடியாகவும் வெளிப் படையாகவும் பேசவது இக்கவிதைகளுக்கான சிறப்பம்சமாகும். கவிதையை அதிகம் சிக்கல்படுத்தி மூடுமந்திரம் ஆக்காமல் எளிமையை கடைப்பிடிப்பதால் இலகுவில் எட்டக்கூடிய தன்மையினை அவை கொண்டுள்ளன. உதாரணங்கள் பல

என் கடவுளே
கனவை விழுங்கவும்
நிலவை சுட்டுப் பொசுக்கவும்
நெஞ்சைக் கல்லாக்கி
பாறையாய்ச் சரிந்து கிடக்கவும்
கற்றுக் கொடு. (...)

இவரது கவிதைகளின் கருப் பொருள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாக அமைந்துள்ள போதிலும் எல்லாக் கவிதைகளும் ஒரேபாணியில் அமையாமல் வெவ்வேறு விதமாக எழுதப்பட்டிருப்பது மாறுபட்ட அம்சமாகத் தெரிகின்றது.

இத்தகைய நல்ல பண்புகளை கொண்டமைந்த இவரது கவிதைகள் பற்றி பின்வரும் விடயத்தினை சுட்டிக்காட்டுவது எதிர்காலத்தில் மேலும் பல நல்ல கவிதைகளைத் கவிஞர் தரவேண்டு மென்பதற்காகவே.

இவரது கவிதைகளை இன்னும் சுருக்கி எழுதும் போது அழுத்தமான கவிதைகள் பிறப்பதற்கு சந்தர்ப்பமுளது. பல கவிதைகள் சொற்கள் குறைக்கப்பட்டு செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுமுள்ளன என்பதுடன் இறுக்கம் செறிவு என்பவற்றில் அதிக கவனம் செலுத்தினால் பல நல்ல படைப்புகளை இவரிட மிருந்து எதிர்பார்க்கமுடியும். இதுவே எனது எதிர்பார்ப்பும்

வாழ்த்துக்களுடன்
ராஜாத்தி

## பேராசிரியர் அ.மார்க்ஸின் குறிப்பு

நான் இலங்கை சென்றிருந்தபோது 'மறுகா' இதழ் சார்பாக மட்டக்களப்பு நூலக வளாகத்தில் நடைபெற்ற மறைந்த கவிஞர் ஆனந்தனின் நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அங்குதான் தம்பிப்பிள்ளை மேகராசா எனக்கு அறிமுகமானார். வரவிருக்கும் தனது கவிதை நூலுக்கு ஒரு குறிப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நானும் ஏற்றுக்கொண்டேன். நான் ஊர் வந்த சில நட்களிலேயே மின்னஞ்சலில் அவர் தனது கவிதைகளை அனுப்பியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த த.மேரா எனப்படும் மேகராசா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணி சிறப்புப் பட்டம் பெற்றவர் எனவும் ஏற்கனவே இரு கவிதை நூற்கள் வெளியிட்டுள்ளவர் எனவும் தற்போது ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார் எனவும் அறிகிறேன்.

சமூக உருவாக்கம், பண்பாடு, உற்பத்திமுறை, சாதி அமைப்பு ஆகிய பல அம்சங்களில் வடக்கிலிருந்து பெரிதும் வேறுபட்டு அமையும் கிழக்கு மாகாணம் கடல் இடையிடையே ஊடுபாய்ந்து அலை மோதும் இயற்கை அழகு கொஞ்சும் எழில்மிகு நிலப்பகுதி. முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இணைந்து வாழும் பகுதி. போர் எல்லாப் பகுதிகளிலும் பாரிய பாதிப்புக்களை நிகழ்த்தியுள்ளதைப் போலவே இங்கும் பெரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. மக்களிடையே பிளவுகளையும் உருவாக்கியுள்ளது.கிழக்கு மாகாண மக்களின் கடந்த தசாப்தம் இத்தனைக்கும் மத்தியில்தான் கழிந்தது. என்ன இருந்தாலும் மனிதர்கள் மனிதர்கள்தானே. இத்தனைக்கும் ஊடாகத்தான் அவர்களிடம் சிறகசைத்த சின்னச் சின்ன ஆசைகள், கவிதைகள், காதல்கள், பிரிவுகள், ஏக்கங்கள், கோபங்கள், சமூக விமர்சனங்கள் எல்லாமும்கூட அமைந்தன.

இப்படியான சில வாழ்வம்சங்களை மிக எளிமையாய் சொல்வனதான் இக் கவிதைகள். சில கவிதைகள் கவிஞர் பழமலையைப்போல கிராமத்துச் சனங்களின் கதையைப் பேசுபவை ('கிராமத்துப்பெண்'). எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற அச்சத்தை வெளிப்படுத்தும் கவிதைகளும் குறிப்பிடத்தக்கவை. வேட்டைப்பற்களை கடைவாயில் கிட்டிக் கொண்டு நாக்கு நீள சந்தியில் நிற்கும் அந்த நாய்,

" இனியும் துரத்திக் கடிக்குமோ
அதன் விசம் ஏறி இறந்தால்
விசாரணை எப்படி நடக்குமோ?
சாட்சி சொல்ல யாரேனும் வருவாங்களோ
பள்ளி செல்லும் என் மகனை விரட்டுமோ
மனைவி வேலைவிட்டு வரும்போது
கண்களை உருட்டிப் பார்க்குமோ
என்னை கடித்து உண்பது பற்றி திட்டம் வகுக்குமோ
யாரிடமும் முறையிட்டால் ஏதேனும் நடக்குமோ? "

என்ற அச்சத்தின் மத்தியில் கழிந்தன அம்மக்களின் சென்ற காலங்கள்..

" சட சடத்துப் பெய்த
மழையின் குளிரில்
உளம் நெகிழ்ந்திருந்த ஒரு மாலை வேளையில்
பலாத்காரமாய் பிரிக்கப்பட்ட
என் நண்பன்
கால மழைபோல திரும்பி வருவானென
எப்படி எதிர்பார்க்க முடியும்?"

என்கிற ' தெளிவுடன் வாழ்ந்த காலங்கள் அவை. எனினும் மனித மனம் 'மரணத்தின் எல்லை தாண்டியும் பிழைத்திருக்கவே விரும்புகிறது'. 'பாசம் அறா மண்ணின் பிடிப்பில் வாழ்தல் பற்றிய புதிய கற்பிதங்களோடு மீண்டும் நிமிர்கிறது' மனித வாழ்க்கை.

போர்க் காலத்தில் ஈழப்பகுதிகளிலிருந்து வெளி வந்த இலக்கியங்கள் அனைத்தும் விரிந்த ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். தமிழியலில் அது ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும்.

புனைவு அல்லாத எழுத்துக்களையும்கூட நாம் தொகுக்க வேண்டும். போர்க்காலத்தில் கல்வி, போர்ச் சூழலில் மருத்துவம் என்றெல்லாம் சில நல்ல நூற்கள் வந்துள்ளதாக ஒரு முறை மதுசூதனன் கூறியது நினைவுக்கு வருகிறது.

மேராவுக்கு என் வாழ்த்துக்கள். அவரது அடுத்த கவிதைத் தொகுப்பு மேலும் அனுபவச் செழுமையுடனும் மொழி நுட்பத்துடனும் அமையும் என நம்புகிறேன்.

ஜூலை 3, 2010

அ. மார்க்ஸ்

3/5, முதல் குறுக்குத் தெரு,
சாஸ்திரி நகர், அடையாறு,
தொடர்பு: +9194441 20582
சென்னை- 600 020
e-mail id : professormarx@gmail.com

## வெளியீட்டுரை

பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராகச் செயற்படும் திரு.த.மேகராசா(மேரா) அவர்களின் சமகால யதார்த்த நிலவரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் "மனக்காடு" கவிதைத் தொகுப்பினை வெளியிடுவதில் நாம் பெருமையடைகின்றோம். ஏற்கனவே கவிதை,சிறுகதை,கட்டுரைகள் அடங்கிய மெல்லப் பறத்தல் நூல்(2011), 2011,2012 ஆம் ஆண்டுகளில் ஒன்றியம் நடாத்திய ஆய்வரங்கங்களின் இரு நூல்கள், முகவரி சஞ்சிகை(2012) என்பனவற்றை ஒன்றியம் வெளியிட்டுள்ளது. கவிதைத் தொகுப்பு என்னும் வகையில் இதுவே முதல்த்தொகுப்பு.

பட்டிப்பளைப்பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் மேரா, பிரதேசத்தின் இயல்புநிலையையும் மக்களின் மனத்துயரங்களையும் யதார்த்த வாழ்க்கை முறைகளையும் தனது கவித் திறமையால் உணர்வு ரீதியாக வெளிக்காட்டுவதில் திறமை காட்டுபவர். அத்தன்மையினையே இத் தொகுப்பிலும் வெளிப்படுத்தியுள்ளார். இவர் "மண்முனைக்குப் பாலம்" என்னும் தலைப்பில் எழுதியுள்ள பின்வரும் வரிகள் படுவான் மக்களின் துயரங்களாகும்.

> "சீடனே வேண்டாம் கவலை
> வேண்டுமுனக்கென்போல் சாணக்கியம்
> எல்லாம் நான் அறிவேன்.
>
> ..................................
>
> அல்லலுற்றுப் பலர் இறந்ததும்
> ஆற்றின் நடுவில் ஓடு பாதையில் குழந்தை பிறந்தும்
> அந்தரத்தில் தொங்கியபடி பயணம் போய் பலர் சறுக்கி
> விழுவதும்
> நேரம் வீணாக

எதிர்த்திசைப்பாதை வரவிற்காய்
குந்தியிருந்து காலம் கடத்துவதும்
மாலையில் மாட்டுப் பாதையோடு மனிதர்கள்
தம்பணி முடித்துச் செல்வதும் அறிவேன்.

நீ சொல் பாலம் கட்டப்படும்???
மீண்டும் மீண்டும் சொல் பாலம் கட்டப்படும்."

தன்னைப்போன்ற ஏனைய வளரும் இளங்கவிஞர்களின் திறமைகளையும் வெளியுலகுக்குக் கொண்டுவரவேண்டுமென இவர் மேற்கொள்ளும் முயற்சிகள் பல. இவரின் இந்த "மனக்காடு" மூன்றாவது கவிதைத் தொகுப்பாகும். இத்தகைய தொடர் முயற்சிக்கு வாசக நண்பர்கள் ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு இக்கவிதை வெளியீட்டில் பங்குகொண்டு உதவிய அனைவருக்கும் நன்றியையும் மேராவின் கவித்திறமை மேலும் வளர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மு.சுதர்ஷினி,

செயலாளர்,
பட்டிப்பளைப்பிரதேச
கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.

## வெந்தும் தணியாத மனக்காடு...

பகிர்தலுக்கும் புரிதலுக்கும் கவிதை நல்ல ஊடக மொழி. வலிகளும் அவ்வலிகளினூடாக வரும் உணர்வுகளும் எல்லோருக்கும் உண்டு. சமகாலம் தந்த வலிகள் எனக்கும் உண்டு. மனக்காடு பற்றியெரிய நான் வெந்துபோன நாட்கள் அதிகம். காலந்தான் என்னைக்காயப்படுத்தியது. எழுத வைத்தது. அன்று,

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்
அதை அங்கொரு காட்டிடை பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு
தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ"

என்று பாரதி அடிமைத் தனத்திற்குத் தீ மூட்டினான்.அவன் காலத்தில் தமிழ்க்கவிதை சமூகத் தளத்தைப் பற்றியது.

ஈழத்துக் கவிதை மரபில் பெரும்பாலும் எண்பதுகளுக்குப் பின் கவிதைக்கு அழகு "பொய்" என்பது பொசிங்கிப்போனது. அடக்குமுறைகளும் அழிவுகளும் ஆக்கிரமிப்புக்களும், இழிநிலைகளும் இதற்குக் காரணங்களாயின.

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு
தன் சேதியை எழுதியாயிற்று.
இனிமேல் யார் காத்துள்ளனர்.
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

என்று கவிஞர் சேரன் இன்றைய தலைமுறைக்கவிதைக்கு உயிரூட்டி வழிகாட்டினார். இதேகாலப்பகுதியில் எம்.ஏ.நுமான் பலஸ்தீனக் கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டதும் அக்கவிதைகள் பல அதிர்வுகளை உண்டாக்கியதும் அறிந்ததே. இவையெல்லாம் எனக்கும் வழிகாட்டின.

இலக்கிய உலகில் எனக்கு உறவை ஏற்படுத்திய நல்ல நண்பன் கவிதை. ஐந்து வருடங்களின் பின் மூன்றாவது கவிதை நூல் வலிசுமந்து "மனக்காடு" ஆகியிருக்கிறது. இந்நெடும் பயணத்தில் எனக்கு வழிகாட்டுபவர்கள் பலர். என் கவிதைகளில் அனேகமானவற்றை என் மனைவிக்கு வாசித்துக்காட்டி விடுவேன். கருத்தையும் கேட்டுவிடுவேன். அது என் தீராத விருப்பு.என் முதற்கவிதைத் தொகுப்பின் முழுக்கவிதைகளையும் மனப்பாடத்தில் கொண்டவர் மதிதான்.என் பல்கலைக்குரு பேராசிரியர் செல்லையா யோகராசா எனக்கு நல்ல வழிகாட்டி. ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதைக் கூட அவரிடமிருந்துதான் நான் கற்றிருக்கிறேன். கோட்டக்கல்வி அதிகாரி ந.தயாசீலன் அவர்கள் என்னைக்காணும் அதிகமான சந்தர்ப்பங்களில் என் கவிதைகள் பற்றியே கதைப்பதுண்டு. ஒருமுறை ஒரு மேடையில் என் கவிதைக்கு அவர் அடிமை எனக்கூறியதும் ஞாபகத்தில் உண்டு. கவிஞர் மலர்ச்செல்வன்,கவிஞர் ராஜாத்தி போன்றோர் என் கவிதையில் மொழிச் செறிவு போதாமை பற்றிக் கூறியதும் உண்டு.அதனையும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கூறுவது சாதாரணமாக எல்லோருக்கும் விளங்க வேண்டுமென்று நான் நினைத்ததும் கவியரங்கங்களில் பங்கு பற்றுவதும் முற்கூறிய குறைபாட்டிற்குக் காரணமாக்கின.கவிதையின் வெற்றிக்கு மொழிச் செறிவு அவசியம்.எதிர்காலம் எதிர்பார்ப்பைத் தூண்டும். கவிஞர் ராஜாத்தி(வெ.தவராசா),பேராசிரியர் அ.மார்க்ஸ், தம்பி பா.புஷ்பகாந்தன்,மல்ரி விஷன் சங்கர், அச்சகத்தார் ,கவிதைகளை வெளியிட்ட இதழ்கள்,இணையத்தளங்கள் சார்ந்தோர் அனைவருக்கும் நன்றிகள்.

என்னிலிருந்து வேறாக்கப்படாத என் கவிதை அடுத்த தடவையும் உங்களைச் சந்திக்கும் என்ற நம்பிக்கையுடன்....

மேரா

30/4ஏ,4 ம் குறுக்கு,
கல்லடி–வேலூர்,
மட்டக்களப்பு.

அரசடித்தீவு,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

## மனக்காட்டில்


1. நிலைபேறு
2. புதிய மரண விசாரணை
3. அந்த நரபலிக்காலம்
4. ஒரு உதயத்தின் மறைவு குறித்த இறுதி அறிக்கை
5. பற்றியெரியுது காடு
6. தீண்டும் நாள் வரும்
7. நூற்றியொராவது தீண்டல்காரன்
8. உன்னால் திருபித் தரமுடியாது
9. உயிர்வலி
10. காத்திருப்பு
11. கடவுள் பற்றிய சந்தேகங்கள்
12. ஆராய்ச்சியாளனின் முன் திட்ட யோசனைக் கசிவு
13. நாளைய தீர்ப்பு
14. சந்தி நாய்
15. அன்று நடந்த ஒன்று....
16. அந்த நாய்க்கு அடிக்காதீர்
17. விடியல் வேட்கை
18. மஹ்முத் தர்வீஷ்
19. கண்டெடுத்த வாக்குமூலம்
20. எதிரொலி
21. மண்முனைக்குப்பாலம்
22. கிராமத்துக்குரல்
23. குமுறல்
24. ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும்.
25. புதை மேட்டில் ஓர் நாள்
26. அன்றைய நீ அழகானவள்.
27. உன்னினைவில் ஒரு நிமிடம்...
28. தவறி வந்த கடிதத்தின் பிரதி
29. அவள்
30. கிராமத்துப் பெண்
31. வீர விதையானவள் நீ
32. ஊர்க்குருவி
33. என் முதல் திருடன் அவன்

## நிலைபேறு

மரணத்தின் எல்லை தாண்டியும்
நான்
பிழைத்திருக்கவே விரும்புகிறேன்

உண்மையாகவே
நான்
பல சந்தர்ப்பங்களில்
பிழைத்திருக்கின்றேன்.

பெரிய பாறைகள்
என் தலையில்
மோதி நொருங்கின
நான் தடுமாறவில்லை
எனது உயிரும் கூட

நான் நடக்கும்
பாதைகளின்
அருகிலிருந்து
என்னை நோக்கி
கோரை முட்கள் பாய்ந்தன
எனினும்
நான் கடந்து சென்றேன்.

கனவுகளின் வெளியிலும்
எனது உடலின் தசைகள்
பங்கு போடப்பட்டன
அப்போதும்
பயம் கொள்ளவில்லை.

மரணத்தின் எல்லை தாண்டியும்
நான்
பிழைத்திருக்கவே விரும்புகிறேன்.

*பங்குனி,2010*

## புதிய மரண விசாரணை

"பல்லிகளைக் கொல்லாதீர்"
என
அறிவிக்கும் அரச வாகனம்
வீதியால்
சென்று கொண்டிருந்தது.

அந்த அரச வாகனம்
சொல்லியது:
"பல்லிகளைக் கொல்லாதீர்"
அவைகளுக்கும்
அனைத்து உரிமைகளும் உண்டு.
அறிவிப்பின் ஈர்ப்பில்
மனம் நெகிழ்ந்து
சந்தோசமாய்த் தெருவோரம் நின்ற
பல்லியொன்றின் தலையில்
திடீரென
அரச வாகனம் ஏற
நச்சென்ற பல்லி
நடுவீதியில் பிணமாய்ச் சரிந்தது.

உயிர் காக்கும் பணியில்
உயிரிழப்புகள் தவிர்க்க முடியாதென
மரண விசாரணை
முடக்கப்பட்டது.

மீண்டும்
"பல்லிகளைக் கொல்லாதீர்"
என்ற அறிவிப்புடன்
அரச வாகனம்
நகர்ந்தது.

*2009, தேனகம்*

## அந்த நரபலிக்காலம்

இரத்த வாடையில்
ஊறித்திளைத்த
சுடலைப்பேய்களின்
நடமாட்டம்
வாழ்நிலமெங்கும்
நெருசலாக
கூடிவாழ்ந்த கோபுர வாசல்
நரபலியெடுக்கும்
பலிமேடாய் மாறிய காலம்

விரித்த தலையும்
அழுது காய்ந்து உக்கிப்போன கண்களும்
கும்பிட்ட கையுமாய்
மண்தாய் சேயிழந்து
குழறிய காலம்.

கண்களில் இனியும்
அழ ஈர ஊற்றின்றி
கவலையோடு வெட்டப்பட்டு
நாளுக்கு நாள் வாடி
அடுப்புக்களில் மாட்டத் தயாராகிய
மரக்கொப்புக்கள் போல
அடைபட்டுக்கிடந்த உறவுகளுக்காய்
இதயம் வேர்த்தழுத நரபலிக்காலம் அது.

மாசி,2010

## ஒரு உதயத்தின் மறைவு குறித்த இறுதி அறிக்கை

*சடசடத்துப் பெய்த*
*மழையின் குளிரில்*
*உள்ளம் நெகிழ்ந்திருந்த*
*ஒரு மாலை வேளையில்*
*பலாத்காரமாகப் பிரிக்கப்பட்ட*
*என் நண்பன்*
*நிச்சயப்படுத்தப்பட்ட*
*கால மழைபோல*
*திரும்பி வருவானென*
*எப்படி எதிர்பார்க்க முடியும்!*

நேற்று....இன்று.....நாளையென
நாட்கள்
நிம்மதியைத் தொலைத்து விட்டபின்பும்
அவர்கள்
சொல்கிறார்கள்
என் நண்பன்
நாளை வருவானென.
தேவையில்லை.

இனி என் நண்பன்
எப்போது வருவானென்று
யாரும் எனக்குச் சொல்லத் தேவையில்லை.

எனக்குள்
எப்போதும் இருக்கும் என் நண்பன்
இனி ஒருபோதும் வரமாட்டானென்று
இப்போது எனக்கு
உறுதியாகத் தெரியும்.

*2011, தமிழ்த்தோட்டம்(இணைய இதழ்)*

## பற்றியெரியுது காடு

நீ கோபப் படக்குடாது
உன் புன்னகையின் அர்த்தத்தைப்
புரிந்துகொண்டவன் நான்.

உன் புன்னகை
ஊர்களை விழுங்கிய சுனாமி.
பூமியைத் தாக்கும் பூகம்பம்.
கீரோசீமா நாகசாலியாவைத் தாக்கிய அணுகுண்டு.
உயிர்களைப்பொசுக்கிய தீப்பிளம்பு.

உன் புன்னகையால்
பற்றியெரிந்த காடு
இன்னும் தணியவேயில்லை.
பத்திரகாளியம்மன் முன்றலில்
பற்றியெரியும் தீக்குழியைவிட
பன்மடங்கு வேகங்கொண்டெழுகிறது
அதுவாக.....

மீண்டும் சொல்வேன்.
நீ கோபப்படக்கூடாது.
எரியும் நெருப்பில்
எண்ணையூற்றுமுன் புன்னகை இனியும் வேண்டாம்.
உன்னையும் எரிக்கும் அது.
நீயும் கவனம்.

*2010,யூலை*

## தீண்டும் நாள் வரும்

நிறைவேற்றத்துணிந்த
உன் அறுவடை முடிந்து விட்டது.

முறுக்கேறிய திமிரோடு நீ.
முள் வேலிக்குள் நான்.

இரவுகளை கொழுத்தி விட்ட
அராஜகன் நீ.
இனிமைகளைப் பறி கொடுத்தழும்.
பனிமழை நான்.

கால அதிஷ்டம் உனக்கு.
உன்னெதிரே
ஆயிரம் வாசமற்ற மலர் மாலைகள்.
மரங்களோடு நின்றிருந்தால்
சுற்றியுள்ள இடங்களுக்காவது
வாசம் வீசியிருக்கும் அவை.

உளத்தில் வேர்த்தெழும்
என் மூர்க்கம்
உனை நிச்சயம் தீண்டும்
தெய்வம் நின்று கொல்லும் என்பது போல.

2009

## நூற்றியொராவது தீண்டல்காரன்

சற்றுமுன் தீண்டியவன்
வீடு போய் சேர்ந்திருக்க மாட்டான்.

வாழ்பதி சிதைத்து
வழிமரபு உடைத்து
பலிவேட்கை தீர்த்த
கலி கால பிரசவத்தின்
நான்காவது உலக
ஏவுதல் பேய் அவன்.

அவன்தான்
உனக்கு முன் வந்து சென்ற
நூறாவது தீண்டல்காரன்.

வெந்து கருகியது
வாழ்வென்னும் வசந்தம்
அதில் நூறென்ன! நூறு கோடியென்ன!
முன்பின் யாரும் வரலாம்
ஏறி மிதி.
காமாட்சி மீனாட்சி
காடேறிவைரவர் எல்லாரும்
அவரவர் உயிர் தப்பிக்க....

இனி என்ன
நாறிப் பொசுங்கட்டும் ஊருலகு.

• கோர யுத்தத்தைத் தொடர்ந்து 2011 இல் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டபோது எழுதப்பட்டது.

## உன்னால் திருபித் தரமுடியாது

நான் இழந்துபோனது
வாழ்வில் எதுவுமில்லையென்று
யாரும் தத்துவம் கூறமுடியாது
நீயும்தான்.

வாழ்வின் வசந்தத்தைத்
தருவதாகக் கூறும் உன்னால்
பறிபோன வாழ்வின்
சுதந்திரங்களைத் திருப்பித் தரமுடியுமா என
சிந்திக்கத் தெரியவில்லை.

ஆக்கிரமிப்பின்
அதிகார வேட்கையில்
பலியாகிப்போன என்
தாயை தந்தையை
சகோதரியைத் திருப்பித் தரமுடியுமா.

ஆடிப்பாடித் திரியவேண்டிய வயதில்
வாடிக்கருகித் தொலைந்துபோன
எனது இளமையை
தாடியோடு கறுத்துச் சுருங்கிக் கிடக்கும்,
என் காதலி நேசித்த திருமுகத்தை
பாட்டன் நட்டு வளர்த்த தென்னந்தோப்பை
பட்டம் பெற்று வேலைக்காய் காத்துநின்ற
என் நண்பனை
திட்டம் போட்டு இடிக்கப்பட்ட
ஊர்க் கோயிலை
இன்னும் அனைத்தையும்
எப்படி உன்னால் திருப்பித்தர முடியும்?

2009

## உயிர்வலி

ஊழிக்கால மழை இருட்டில்
தன் கிழை இழந்து
ஓர் ஒதுக்குப் புறத்தில்
தனித்தசைகிறது அந்த மரம்

எழிலை விழுங்கிய
ஓர்மம் பிடித்த சோகம்
கனதியாக
அதில் அப்பிக் கொள்கிறது.

தோப்பிழந்து
தனித்து வாழா
காலத்திற்கு முந்திய
நினைவுகளை
ஏப்பமிடும்
அந்தத் தனிமரத்தின் மீது
காகம்
காலத்தைப்போல
எச்சமிட்டுச் செல்கிறது.

நினைவு துரத்திக் கொத்திய
காயத்தின் துர்நாற்றம்
அதை மயான மேட்டுக்கு அழைக்கிறது.

நினைவிலும் கனவிலும்
இரவிலும் பகலிலும்
உயிர்வலி கனத்தெழ
இப்போதும்
தன்னை அச்சுறுத்தும்
கொடிய காற்றில் சிக்கி
நெளிகிறது
சரிகிறது
தடுமாறுகிறது அந்த மரம்

எனினும்
பற்று அறா
மண்ணின் பிடிப்பால்
வாழ்தல் பற்றிய
புதிய கற்பிதங்களோடு
மீண்டும்
நிமிர்கிறது.

*2009*

## காத்திருப்பு

கடவுளின்
அஞ்ஞாதவாசம்
இன்னும் முடிவதாயில்லை.

மரணபயம்
ஊர்களைச் சூழ்ந்து
சுழற்காற்றுப்போல்
பகலை விழுங்கி
இரவை அச்சுருத்தி
பலிமேட்டில் சிலிர்த்து நிற்கின்றது.

இராமனுக்காக
அயோத்தி
பதினான்காண்டுகள்
காத்துக்கிடந்தது.

கடவுளின்
நாட்டுப் பிரவேசத்திற்காக
இன்னும்
எத்தனை நாள் காத்துக் கிடப்பதோ?

மனிதர்கள் பலர் மனம்மாறிவிட்டனர்.
புனிதர்கள் பலர் மரணித்து விட்டனர்.
கடவுளில்லாத இடைவெளியில்
பலர்
உலகத்தைப் படைக்கத் தொடங்கிவிட்டனர்.

கொம்புகளோடும்
வேட்டைப் பற்களோடும்
உலாவும் மிருகங்கள் பற்றியும்
கொப்பிழந்து வாடும்
குரங்குகள் பற்றியும்
எழுதிய
எழுத்தாணி நிறுத்தப்படுகிறது.
....................................
.........................................

இன்னும்
எத்தனை நாட்கள்
கடவுளின்
நாட்டுப் பிரவேசத்திற்காக
காத்துக் கிடப்பதோ?

*2008*

## கடவுள் பற்றிய சந்தேகங்கள்

ஆழி நீரிலும் குருதி கொப்பளிக்க
ஊழித்தாண்டவம் ஈழத்தை மேய்ந்தது.
கல் வைத்த பதியெங்கும்
கண் மூடி மன்றாடி
கூப்பிட்டுக் கட்டியழுத போதும்
பலிகொண்ட துப்பாக்கி
தின்னத் துரத்த
உழன்று அலைந்து
கருகி எரிந்து
மக்கி மண்ணாகியபோதும்
காலம்தோறும்
அசுரரை அழிக்க
கதைகளில் வந்த
கடவுளர் ஒருவர் கூட பிறந்து வரவில்லை.

சூலமும் வேலும் ஏந்தி
வீரமும் தீரமும் காட்டி
வீற்றிருந்த கடவுளர் எவரும்
குண்டுகள் விழுந்து
கூரைகள் சிதைந்து
கோயில்கள் எரிந்தபோதும்
தம் அங்கங்கள் உடைந்து
அலங்கோலமாய்ப் போனபோதும்
தன் மானங் காக்கத் துணியவுமில்லை.

யுத்த அரக்கனை
எதிர்க்கப் பலமின்றி
ஓடி மறைந்த கடவுளருக்கு
சொந்தப்பதியில்
மீளக்குடியமர
துளியும் ஏனோ
இன்னும் துணிவு வரவில்லை.

அநீதியை அழிக்கும்
கடவுளரைத் தோற்றுவிக்கும்
என் கனவுகளில்
கருக்கொள்ளும் கடவுளர்களை
யாரோ கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

*2009*

## ஆராய்ச்சியாளனின் முன் திட்ட யோசனைக் கசிவு

எதிர்கால அகழ்வாராய்ச்சி
அதிசயமாய் அமையும்
நிச்சயம் நீ காண்பாய்

குருதி குடித்து நிறத்த
நிலத்தைத் தோண்டுகையில்
நிச்சயம் நீ இதனைக் காண்பாய்

அலையடிக்கும் இரத்தக் கிணறுகள்
அடுக்கடுக்காய் நிலக்கீழிருக்கும்.

தனியார் வைத்திய சாலை
இரத்ததான வங்கிகளும்
இலவச சேவை வழங்கும்.
நிச்சயம் உலகம்
நம்நாட்டிடம் மண்டியிடும்

மனிதப் புதைகுழிகளால்
புதையுண்ட நகரங்களின் முதன்மைக்கான
கின்னஸ் சாதனையும்
நமக்கே திண்ணம்.

உடல்களால் உயர்ந்த
புதை மேட்டில் நடும் பயிர்
உயர்ந்த பயன் தரும்.
விடயமறியார்
உரமானிய சேவையைப் பாராட்டுவர்.
பல்கலை ஆராய்ச்சித் துறை மறுத்தும்
பயனின்றிப் போகும்.

ஆராய்ச்சியாளர்கள் பலர்
காணாமல் போவர்.
தனித்தனியாக அவர்களுக்கு
பாராட்டு விழா நடைபெறும்.

அதையும் நீ காண்பாய் அதிசயமாய்....

*2010*

## நாளைய தீர்ப்பு

சூரியனை நோக்கி
ஆயிரம் கற்கள்
வீசப்பட்டு ஓய்ந்து கொள்கின்றன.

வழங்கப்பட்ட
பஞ்சாயத் தீர்ப்புக் குறித்து
பலவிதக் கதைகளும்
எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவை முழுவதும்
உண்மையுமில்லை
முழுவதும்
பொய்யுமில்லை

நாளைய
சூரிய உதயம்
இன்னுமொரு கதையை எழுதும்.................

2009

## சந்தி நாய்

வேட்டைப் பற்களை
கடைவாயில் கிட்டிக்கொண்டு
நாக்கு நீழ
ஈரற்குலை பிடுங்கும்
கொலைகாரனைப்போல்
யாருக்காக இந்த நாய்
காத்து நிற்கிறதோ

பழக்கதோசமோ!
மேலதிக நேரமும்
பணியாற்றவேண்டிய கட்டாய கடமையோ
கால்வலிக்காதோ! கண்சோராதோ!
இனியும்
துரத்திக்கடிக்குமோ!
அதன் விசம் ஏறி இறந்தால்
விசாரனை எப்படி நடக்குமோ!
சாட்சி சொல்ல யாரேனும் வருவார்களோ!
வைரவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமோ!
பள்ளி செல்லும் என் மகனை
விரட்டுமோ!
மனைவி வேலை விட்டு வரும்போது
கண்களை உறுட்டிப் பார்க்குமோ!
என்னைக்கடித்து உண்பது பற்றி திட்டம் வகுக்குமோ!
யாரிடமும் முறையிட்டால் ஏதேனும் நடக்குமோ!

அடிமனதில் எப்போது அதற்கு
அன்பு ஊறுமோ
அன்றே அதற்கு எல்லோர் வீட்டிலும் விருந்து.
அதுவரை யார் யாரோ அதற்கு விருந்து.

*2011.*

மெல்லப்பறத்தல் தொகுப்பு.

## அன்று நடந்த ஒன்று....

மனப்புதையலில்
கனவாய் நேற்றொரு
போர்க்காட்சி வெடித்தது

வலிகொண்ட கோசத்துடன்
போருக்கு
அணிவகுத்தன எறும்புகள்

காற்றுக்கு வேலியிடும் நேரம்
எதிரியைச் சுடச்சென்ற துப்பாக்கிகள் சில
மண்டியிட்டு மண்ணில்
மூச்சடங்கி விழுந்தன.

அதிர்ச்சியில் திடீரென
போர்வை விலக
கண்கள் அழுதன
நேற்று மடிந்த பூவை எண்ணி.

2010

## அந்த நாய்க்கு அடிக்காதீர்

அந்த நாய்க்கு அடிக்காதீர்
பசியால் வாயூற
பாற்கிண்ணத்தில்
வாயூன்றியதற்காய்
பாவம் எத்தனை அடிகள்.

முகம் நோக்கி
வாலாட்டி
சுகம் விசாரித்து
உடல் உரசும்
செல்லப்பிராணிக்கு
அடிக்காதீர்.

எச்சில் நாசுவைத்து
நாதியற்றுத் திரியும்
தெருநாய்போல்
அந்த நாய் இல்லை.

எதிர்த் தெருவில் எலும்பெண்ணி
எமக்கெதிராய் குரைக்கவும் இல்லை அது.

உள் வீட்டுப் பண்டத்தை
ஊரார்க்கு முகர்ந்து காட்டி
உண்ட வீட்டுக்கு
இரண்டகம் செய்யவும் இல்லை

கல்லறையில் எழும் நம் வாசத்தில்
கண்ணீரோடு சினைவைப் பருகி
நன்றி சொல்லும் அந்த செல்லப்பிராணிக்கு
தயவு செய்து இனி அடிக்காதீர்.

*2009*

## விடியல் வேட்கை

முயற்சி செய்து விடியலுக்கான சூரியனை
வரைந்தெடுக்கையில்
இரவோடு இரவாக
அது எரியூட்டப்படுகின்றது

யாரோ எழுதித் தரப்பட்டதை
வாசிப்பது போல
வாழ்க்கை கழிகிறது.

நரகலோகத்துக் கழிவறை போன்ற
அந்த
வாழ்க்கையை வீசியெறிவது பற்றிய திடமான
உறுதியோடு
நான்கு கண்கள் யோசிக்கின்றன.
எட்டுக் கண்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

2010

## மஹ்முத் தர்வீஷ்

மஹ்முத் தர்விஷ் என்னும்
மா மேதையே
நீ இறந்த துயர்
நெஞ்சைத் தாக்கிது

பலஸ்தீனத்தின்
அடங்காத பற்றாய்
எழுத்துக்களில் ஏறி
பாரெல்லாம் பவனி வந்த பருதியாய்
விருட்சத்தின் ஆணிவேராய்
விடுதலையின் வீரியமாய்
நீ இருந்தாய்

உன் கவிதைகளைக் கற்றபோது
உன்னைப் புரிந்தது
என்னை அது தாக்கியது

உன் கவிதைகள்
ஒவ்வொன்றும்
அடக்குமுறைக்கெதிரான பேரொலிகள்
அடங்காத மண்ணின் முத்துக்கள்
கண்ணீரின் மீட்சிகள்
அடிமை விலங்கொடிக்கும் ஆயுதங்கள்
விடுதலைக்காக
குரல் கொடுப்போர்க்கு
ஒரு தைரியம்.

எட்டுக் குழந்தைகளுக்கும்
ரொட்டித் துண்டுகளைக்
கொடுப்பதற்காய்
கற்பாறைகளைக்
கசக்கிப் பிழிந்த நீ
ஒரு சரித்திரத்திற்காய் முனைந்தாய்
இன்று நீயே ஒரு சரித்திரமாகி விட்டாய்.

• பலஸ்தீனக்கவிஞர் மஹ்முத் தர்வீஷ் இறந்தபோது எழுதியது

## கண்டெடுத்த வாக்குமூலம்

என் கடவுளே
கனவை விழுங்கவும்
நிலவைச் சுட்டுப் பொசுக்கவும்
நெஞ்சைக் கல்லாக்கி
பாறையாய்ச் சரிந்து கிடக்கவும்
கற்றுக் கொடு.

இன்னும் கற்றுக்கொடு
வீதிக் கடவையில்
விதவையென எனைத் தூற்றும்
விந்தை மனிதர்களின் நாவறுக்கவும்
துரத்தி வரும்
இந்திரர்களின் விழி எதிரே
அகோரப் பேயாய்
ஆதி வடிவம் கொள்ளவும்
கற்றுக் கொடு

*மார்ச்,2008*

## எதிரொலி

தீராத காம வேட்கையோடு
அலையும்
இந்திரர்களே
உங்களால்
எத்தனை
அகலிகைகள்
கல்லாகிப் போனார்கள்
தெரியுமா?

இன்னொருவனின்
மனைவியைக் கடத்தும்
இராவணர்களே
உங்களால்
எத்தனை
சீதைகள்
அக்கினிப் பிரவேசம் செய்கிறார்கள்
தெரியுமா?

மாதவிகளைக் கரம்பிடிக்க நினைக்கும்
கோவலர்களே
உங்களுக்கு
முதல் மனைவியாய்
கண்ணகிகள் உள்ளனர் தெரியுமா?

வீண் பழி சுமத்தி
கோவலர்களை
கொலை செய்யும்
பாண்டிய மன்னர்களே
உங்கள்
உயிரைப்பறிக்க
கையில் ஒற்றைச் சிலம்புடன்
எத்தனை
கண்ணகிகள் தெரியுமா?

*சித்திரை,2009*

## மண்முனைக்குப்பாலம்

"குருவே!
பாரச் சிலுவை தூக்கும்
படுவான் மக்களுக்கோர் பாலம் எப்போது?"

பரமார்த்த குரு பல முறை யோசித்தார்.
"உன்னெண்ணம் நல்லது சீடா
படுவான் வாழ்வுக்கோர் பாலம்
அமைப்போம்."

83 இல் அடிக்கல்
இருபுறமும் கற்கள்.....

பின்னொருநாள்
"குருவே குருவே
குவித்த கற்களை காணோம்
மலையறியா
இராவணர்களின் குரங்குகள்
களவாடிச் சென்றுவிட்டன."

நிஷ்டை கலைந்த குரு
"அடிக்கல்!!!"
"அப்படியே இருக்கின்றன"
"இருக்கட்டும்"

பலவருடங்களின் பின்

"குருவே இனியாவது பாலம் கட்டலாமே
காலம் பயணத்தில் வாழ்நாளை அழிக்கிறது."

"படுவான் வாழ்வுக்கோர் பாலம்
அமைப்போம்"
2011 இல்
நீர் நில இயல்பறிய

மிதவை இரைந்தது..
எல்லோர்க்கும் சந்தோசம்!!

சிலநாட்களின் பின்
"குருவே கட்டறுந்து மிதவையெங்கோ ஓடிவிட்டது
காணோம் எங்கும் கவலையே மீதி"

சீடனே வேண்டாம் கவலை
வேண்டுமுனக்கென்போல் சாணக்கியம்
எல்லாம் நான் அறிவேன்.

கடல் காயும் உச்சி வெயிலில்
உடல் வாட
எல்லோரும் ஏறியும்
இம்மியும் அசையாது படகு
குந்தியிருப்பது........

பக்கத்துக் கண்ணாப்பற்றைக்குள்
கடிகார முள்ளசைவைப்பார்த்தபடி
படகோட்டி சோம்பியிருப்பது....

பாலம் எப்போது கட்டப்படுமென பயணிகள் கேட்பது...

அல்லலுற்றுப் பலர் இறந்ததும்
ஆற்றின் நடுவில் ஓடு பாதையில் குழந்தை பிறந்தும்
அந்தரத்தில் தொங்கியபடி பயணம் போய் பலர் சறுக்கி
விழுவதும்
நேரம் வீணாக
எதிர்த்திசைப்பாதை வரவிற்காய்
குந்தியிருந்து காலம் கடத்துவதும்
மாலையில் மாட்டுப் பாதையோடு மனிதர்கள்
தம்பணி முடித்துச் செல்வதும் தெரியும்...

நீ சொல் பாலம் கட்டப்படும்???
மீண்டும் மீண்டும் சொல் பாலம் கட்டப்படும்.

தை,2012

## கிராமத்துக்குரல்

"தேர்தல் வருகுது
தேர்தல் வருகுது"

வாக்குவேட்டை வேலி தாண்டுது.

"நில்லுங்கள் பொன்னான வாக்கை
மண்ணாக்காதீர் என்கிறீர் உம்மால்
மண்ணாகிய வாக்கை
பொன்னாக்குவீரோ"

தேர்தல் கால மேடைகளில்
சத்தியம் செய்த
அரசியல் வாக்குறுதிகளை நம்பி
வாக்குப்போட்டதற்கு நன்றி தெரிவித்தீர்
உறவுகளையும் உடைமைகளையும் இழக்கச் செய்து

வயிறொட்டிய ஏழையின் வாக்கால்
பசையொட்டிய பதவிக் கதிரையில் ஏறிய உமக்கு
இன்னும் இன்னும் எத்தனை ஆசை.

ஐயா பெரியவரே
ஊருக்கோ நீங்கள்
பார ஊர்தியில் வரவேண்டாம்.
ஆதியில் போட்டதனால்
வீதி கொஞ்சம் மோசம்
மாரியில் கட்டாயம்
காரில் வரவேண்டாம்.

உறவின் ஆச்சரியம் நீங்கள்!!!
ஏசி மாளிகையை விட்டு
வெளுக்கும் வெயிலில்
வெந்து வாடி வருகிறீர்
போன தேர்தலுக்குப் பின் இந்த முறை.
உறவை விசாரிக்க அல்ல
வாக்கு வேட்டையாடி.

நீங்கள் வராத நாளில்
என்பாட்டனும் குழந்தை மச்சானும்
குண்டு பட்டு இறந்தது உங்களுக்குத் தெரியுமா?

அன்று உங்களைச் சந்திப்பதற்காக வந்தபோது
சார்த்தப்பட்ட கதவு
நாங்கள் திரும்பும் வரை திறக்கப்படவேயில்லை.

உங்களைப்போல்
நாங்கள் இல்லை.
நேரில் எங்களைப்பார்க்க விரும்பினால்
நேர்மையுடன் வாருங்கள்
இளையான் குடியின் வாருசு நாங்கள்
இலைக்கறி சுண்டலோடேனும் இதமாய்த்
தருவோம் விருந்து.

2010

## குமுறல்

உழைப்பால் உலகம் உயருது.
எனினும்
உழைத்தும் உயராமல்
களைப்பால் தொழிலாளர்
உடல் வாடுது.

நாட்டை உயர்த்த
றோட்டுப்போடுகிறார்கள்
என்
ஓட்டைக்குடிசை
நீரில் மிதக்கிறது.

பாலை வனத்தை
சோலைவனமாக்குகிறார்கள்
தொலைநாட்டில்.
நம் நாட்டில்
சோலைவனம்
பாலைவனமாகியது
நடந்துமுடிந்த யுத்தத்தில்.

என்னைப்படிப்பிப்பதற்கு
வாங்கிய வட்டிக்கு
என்னம்மா
பாட்டியாகிவிட்டாள்
அது வேகமாக
குட்டி போட்டுக்கொண்டிருக்கிறது.

குடிசை வீட்டில்
குப்பி விளக்கோடு
தவம் செய்துபெற்ற
ஏழையின் இலட்சியப் பட்டம்
கொடுத்து வேலை பெற
இலட்சங்கள் இல்லாமையால்
செல்லுபடியற்றுப்போய்க் கிடக்கிறது.

சலுகைகளால்
தரமிழந்து
நம்நாட்டின் கல்வி
சாக்கடையில் கிடக்கிறது.

அதிகார வாக்குறுதிகள் தடுமாற
அரிச்சந்திரர்கள் அடிக்கடி தற்கொலை
செய்கிறார்கள்.

மாசி,2012

## ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும்.

கண்ணீரோடு ஊர்வாய்கள் கதை சொல்லித்திட்டியும்
ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும்
ஓயவில்லை என்றனர் பலர்.
பிறந்தோர் யாவரும்
இறப்பர் என்பதால் ஊரார் மொழி
காதில் இனித்தது.

என்னாசை மண்ணாசை என்று தெரிந்தும்
பொன்னாசை என்னை விடவில்லை.
என்காலில் விழுந்து என்சொல் கேட்டுத் தோள்கொடுக்க
துணையாய் நின்றனர் சிலர்

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தலென்று
பாரதி புகன்ற மொழியும்
ஊரார் அழுத கண்ணீர் உருத்துமென்னும் சொல்லும்
என்மூளைப்பள்ள இடுக்கில்
மரணித்துப் போயின.

இரவு தூங்கினும்
மூளை தூங்க
ஆசை விடவில்லை.
யுத்தம் வெள்ளம் புயலென
நித்தம் கொடுமைகள் வந்தன மக்களுக்கு.

துன்பக் கனலில் விழுந்து உழலும்
மக்கள் பெயரில்
இன்பம் காண மனம் பின்னிக்கவில்லை.

போலிக் கையொப்பங்கள் பொலிவாய்க் கிடைத்தன.
பொலி பொலி தம்பிரான் பொலியென பொலிந்தது பணம்.
நிறைந்தது பண மூட்டை.
கேலி செய்து புட்டிசம் அடித்தனர் பலர்.
எனினும்
யாமிருக்கப் பயமேன் என்று
வேலியாய் மேல் அதிகார அருள்
காத்தது என்னை.

என் செயல் அநீதியென
வாயில் பலர் முணுமுணுத்தாலும்
காட்டிக்கொடுக்கவும்
முன் வந்து நிருபிக்கவும்
முயலவில்லை யாரும்.

இரகசியங்கள் அந்தரங்கமாய்த் தூங்கின.
என்னாட்சி நிலைக்க அதிகார அருள் பரிசளித்தது.

*2012,முகவரி சஞ்சிகை*

## புதை மேட்டில் ஓர் நாள்

புதைமேட்டில் கிடக்கும்
நாய் நரிகள் பெரும்பாலும் பட்டினி கிடப்பதில்லை
நானும் பார்த்திருக்கிறேன்

வழமையாக
சில சவங்களை நாலுபேர் காவிவருவர்
சிலர் பின்தொடர்ந்து வருவர்
சில வேளை
நன்றியோடு நாய்களும் காவிவரும்

இப்போதும்
ஒரு சவத்தைக் கொண்டு புதைக்கின்றனர்
இறந்து போனவரின்
உறவினர் யாரோ
உரத்துக் கத்திக்கொண்டு
ஓடி வருவது தெரிகின்றது.

இறந்து போனவரின்
சொத்துப் பகிர்வில் ஏற்பட்ட முரண்பாட்டில்
ஒருவரது உடல் நிலத்தில் சரிகிறது.

சிலவேளை அந்த உடலை
அப்படியே விட்டுச் செல்வர் என நினைத்து
நாயொன்று
மதியம் உண்ட
கிழவரொருவரின் நாறிப்போன ஊனத்தை
சத்தியெடுத்துக் கொண்டிருக்கின்றது.

புதைமேட்டின்
பக்கத்துக் கல்லறையில் தூங்கும் நான்
எல்லாவற்றையும்
பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

மார்கழி,2010

## அன்றைய நீ அழகானவள்.

காற்றுப்போல திசைமாறும் நீ
நேற்றுப் போல் இன்றில்லை.

உன்னால் எப்படி முடிந்தது
எல்லாவற்றையும் மறப்பதற்கு.

என் முதற்பார்வையை
நீ பக்கத்து வீட்டு பாழ்வளவில்
எரித்து விட்டதாக நான் அறிந்தேன்.
முப்பத்தோராவது தடவையும்
யாரையோ நீ
அங்கே எரித்தாயாம்.

இன்றைய உன்னிலையில்
முழுவதும் நம்புதற்குரியதே.

உன்னைப் பற்றிய நாளைய
என் நினைவு
நேற்றைய ஒரு பூவின் மரணத்தோடு
சருகாகி விட்டது.

ஆனாலும் அன்றைய நீ
எனக்குள் அழகானவள்.
அதனால்
என் இதயத்தில் இப்போதும்
அந்நாள் உன்னுருவம் இருக்கிறது.
அதன் ஓரத்தில் நீயிட்ட
முத்தத்தின் ஈரமும் இருக்கிறது.

வைகாசி,2012

## உன்னினைவில் ஒரு நிமிடம்...

வில்லுக்குளத்தருகில்
நீ
தெத்துப்பல் தெரியச் சிரிக்க
நான்
நீந்தத்தெரியாமல்
நீரில் குதித்தது........

தாந்தாமலை
ஊர்த்திருவிழாவில்
தாவணியோடு அழகாய் நீ முன் செல்ல
பூவாளிச் சாரலுடன்
உன் பின்னால் நான் சுற்றியது.......

ஊர் சேர்ந்து தேர் இழுக்க
சன நெருக்கடிக்குள்
உன் மனசை நானிழுத்தேனென்று நீ சொன்னது...

உடன் பிறப்பையிழந்து
சோபிக்கக் கதறி நீயழ
உன்னழகு முகம் கசங்கியதென்று
நான் அழுதது....

உன் வேலி ஓரத்தில்
நீயும் நானும் நின்ற
இருள் குவிந்த அந்நேரம்
பக்கத்துக் கத்தாமரத்தை
நண்பர்கள் உசுப்ப
பேயென்று நீயும் நானும் ஓடியது....

இத்தனையுமிப்போ உனக்கு நினைவிருக்கா?

என்னினைவால் உன்வாழ்வில்
ஐயோ ஒன்றுமில்லையே.

என் கல்லறையில் பூத்திருக்கும் காட்டுப்பூ
உன்னைப்போலவே
அழகாயிருக்கிறதென்று
எப்படி நானினிச் சொல்வேன்.

பங்குனி,2010

## தவறி வந்த கடிதத்தின் பிரதி

..................................

முற்பகுதி அந்தரங்கமானது
பிற்பகுதி இப்படித்தான் இருந்தது.

வலியறியாப் பருந்து போல
கட்டி முத்தமிட்டு
கலவை பூண்டு
பசியாற்றி நீ பறந்துவிட்டாய்

அன்று
கௌதமர் ஏமாந்தார்
இந்திர நாடகம் பரிசு பெற்றது.
பாவம்
அகலிகைக்குச் சாபக்கேடு.
சீதைக்கும் அப்படித்தான்
அக்கினி பிரவேசம்!
எனக்கு!!!

உள்ளம் தூய்மையாக இருக்கும் வரை
உடல் களங்கப்படுவதில்லை யென்பதை
எந்த எஜமான்
புரிந்து கொள்ளப் போகிறான்

வைகாசி,2011

## அவள்

இருள் அப்பும் இரவில்
அவள் மட்டும் தெருவில்

என் சைக்கிள் ஒளிகண்டு
சிரித்து நாணத்தால்
ஒழித்து முகம் காட்டி அவள் நிற்க
நான் மட்டும் நானில்லை.

அம்மணப்பருவத்திலிருந்து
ஆள்மாறி மாறிச் சொன்ன
வக்கானும் பேயும் நினைவில் வர
பீப்பயம் எனக்கு.

யாரோ அவள்....

குழிக்கண் உளிப்பல்
கிளி மூக்கு கிழிஞ்ச சட்டை
பழந்துணி பூமுடிச்சிக் கொண்டை
சுளிக்கால்
செருப்பைத் தொலைத்த பாதம்
பரட்டைத்தலை
இடுக்கியொரு பை
கையிலொரு தட்டு.

ஓ அற்புதம் அக்கா!

கிறுகி நிலம் கிண்டி
கிறுகிறுத்தவள் போல
சுளிக்காற்று நடை நடந்து
மீண்டும் குனிந்து
தலை சொறிந்து
வார்த்தை விழுங்கி
எனைப்பார்த்து அவள் ஒதுங்கினாள் ஓரமாய்.

என்திசை நான்செல்ல
என்னோடு என்னினைவில் அவள் வந்தாள்

நகர சபை நாள் பட்டும்
அவள் பக்கம் வருவதில்லை.
எரிப்பாள் குப்பைகளை
வீதியெங்கும் துப்பரவு.

எதற்கும் பதில் ஒன்றுதான்
சிரிப்பு.

குளிப்பும் புதுச் சட்டையும் இன்னும் பலவும்
பிடிப்பில்லை அவளுக்கு.
கரிக்கட்டி, பழஞ்சோறு பாண்
தேநீர் ஆறியது பிரமாதம்.

வீடில்லை வீதிதான்.
விடிவதும் சூரியன் மறைவதும்
விதிவிலக்கு அவளுக்கு.

என் வீடு நான் எட்ட
வானம் பிளந்து மின்னல் சிரித்தது.
சடசடத்தது பெருமழை.
என் செய்தாளோ அவள்
அன்றிரவும் அவள் நினைவே.

தை,2012

## கிராமத்துப் பெண்

பொன்னாச்சி ஐயாவின்
பொண்டாட்டி குஞ்சம்மா
நெஞ்சில் வஞ்சமில்லாத தங்கம்மா

குழிவிழுந்த முகமும்
வெத்திலாக்குக்
கறைபடிந்த வாயும்
கோதிக் கட்டிய
நரை விழுந்த கொண்டையும்
செருப்பைப் பிடிக்காத
தேய்ந்து போன காலும்
பட்டென்ற பேச்சும்
படபடத்த நடையுமாய்
உலாவிய உருவம்

குளத்தில் குஞ்சு மீன் பிடிக்க
அத்தாங்கும் ஒமலுமாய்
குறுக்கக் கட்டோடு
புறப்படும் அணிக்கு
அவள்தான் தலைவி

புள்ள பொறந்தா
புள்ள பெரிசாகி
தண்ணி வாத்தா
யாரும் செத்தா
ஊருல உத்தியாக்களுக்குச் செய்தா
முந்திப் போய் பந்தியில
குந்தியிருந்து
எழும்பி வராட்டி
நிம்மதியில்ல அவளுக்கு.

வண்டில் மாட்டை
பேய் மறித்த கதை
குஞ்சம்மா
வரம்புக் கட்டில
குந்தியிருந்து காட்டுக்குப் போனபோது
கோயிலுக்குப் போக
கூட்டமாய் வந்த சனம்
பேயெண்டு
கீரிட்டு ஓடின கதையெல்லாம்
கூடிப் பழகினா
சிரிப்போட சொல்லிடுவா.

கட்டிய கணவனை
கண்ட பிள்ளைகளை
இயற்கையோ
கொடுத்துப் பறித்திட
நெஞ்சில் கவலையோடு
தனிமையில் இருந்தாலும் குஞ்சம்மா
மானத்தோடு வாழ்ந்து
கிராமத்துப் பெண்ணாய்
மண்ணோடு கலந்து விட்டாள்.

ஆடி,2009

**வீர விதையானவள் நீ**

மாமி பெற்ற நங்கனமேயென்
ஆவிக்கூட்டு ஓவியமே – அன்று நீ
ஆமிக்கெதிராய்ப் போராடப் போக நான்
பூமி பிளக்க நொந்தேனடி

கோல மயிலேயென்
கோதா மாம்பழமே – நீ ஏகேயுடன்
கால போட்டமடுதாண்டி நிற்காயென்று
பாலமாமன் சொன்னாரடி.

பால்காய்ச்சியெடுத்து அம்மாவுடன்
பார்க்க வர இருந்தேனடி – நீ
அடிபாட்டில் இறந்ததையறிந்து நெஞ்சு
அடிபட்ட காயமானதடி.

சாமிக்கெல்லாம் நேர்ந்தேனடி
சாகக் கூடா நீயென்று - இன்று
நெஞ்சில் குண்டுபட்டு
நேரிழையே நீ இறந்தனையே

கருமேனிக் கவர்ச்சியடி – நீ
உருவிலே உலக அழகியடி - யென்
பருவத்து பசுங்கிளியே – நீ
பாரதியின் புதுமைப் பெண்ணடி.

நீ நடந்த வீதியெங்கும்
வாழைமரம் நாட்டிருக்கு
உம்பெயர் முன்னாலே
வீரப்பெண் என்றிருக்கு.

வம்மிப்பழம் போல நொந்து
விம்முதடியென்னிதயம்
வம்புகொண்ட மறத்தமிழே
உம் வீரம் பெரியதடி.

## ஊர்க்குருவி

ஊர்க்குடிசை தோறும்
ஊர்க்குருவி வாழும்
உலகத்தவர்க்கெல்லாம் - அது
உயர்ந்ததென்று தோன்றும்.

எமக்கும் குடிசை வீடு
அதற்குள்
அதற்கும் ஒரு கூடு
நோக்கும்போது எல்லாம்
பார்க்கும் கண்களை உருட்டி.

சோம்பலின்றி வாழும்
சோகம் இன்றிப் பாடும்
சொந்த முயற்சியில் கூட்டை
சேர்ந்து கட்டியெடுக்கும்

கூடி என்றும் திரியும்
குடும்பமாக வாழும் - சிலர்
கூடு கலைத்து விட்டால்
குடும்பத்தோடு குழறும்.

எனினும்
வாழவென்றே நினைக்கும்
வானமெங்கும் பறக்கும்
தேடி ஒரு கூட்டை
மீண்டும் கட்டி எடுக்கும்.

வண்ணமுட்டை இட்டு
வடிவாய் அடை காக்கும்
உடைந்து ஒன்று போயினும்
உயிர் வலிக்கத் துடிக்கும்

கொஞ்சிக் குலாவி வாழும்
குஞ்சும் பொரித்து மகிழும்
ஒன்று மாறி ஒன்று அதற்கு
கொண்டு கொடுக்கும் உணவு.

முயற்சியோடு வாழ்வதால்
பசித்து அவை கிடப்பதில்லை.
பாம்பு பருந்து என்றால்
பயந்து நடுங்கி பறந்துவிடும்.

பட்டுப்போர்த்த மேனி – அதைத்
தொட்டுப் பார்க்கச் சொல்லும்
எட்டுப் போட்டு நடந்தால்
அழகை மனதில்
விட்டுப் போட்டுப் பறக்கும்.

கள்ளம் இன்றி வாழ்வதால்
தொல்லை நேர்ந்ததில்லை
அதன்
உள்ளம் பார்க்கவிரும்பினால்
ஊரில் வந்து பார்க்கலாம்.

தமிழ்த்தோட்டம்,2011

## என் முதல் திருடன் அவன்

புத்தகம் ஒன்று
என்கையில் கிடைத்தது
புதியதாகப் படைக்கப்பட்டது
அழகான அட்டை.
குழந்தையைக் கொஞ்சுவது போலக் கொஞ்சி
ஆசையோடு புரட்டினேன்
என் ஆக்கமும் இதிலிந்தால்
நன்றென நினைத்தேன்
நான் ஒரு தீவிரமான ஆசைக்காரன்.

நாலைந்து பக்கம் கழிய
நான் எழுதிய கவியின் முதல்வரி..........
சந்தேகம்... சந்தோசம்... ஆச்சரியம்....
உண்மையில் அதுதான்
அக்கறை கொண்டோர் யாரோ
அனுமதியின்றி பிரசுரித்துவிட்டாரென எண்ணி
கடைசிவரியின் கீழே பார்த்தேன்
அது இன்னொருவர் பெயரில்.

உண்மையில் என் அழியாச் சொத்தைத் திருடிய
முதல் திருடன் அவன்தான்
என்னைவிட மிக மிக அதிகம்
ஆசை கொண்டவனும் அவன்தான்.

மார்கழி,2007



தமிழ் மொழியில் சிறப்புப்பட்டம் பெற்ற கவிஞர் மேரா தமிழ் மொழியின் பாலும் தமது சமூகத்தின் பாலும் அக்கறை கொண்ட சமூக சீரழிவுகளை கண்டு சினம் கொள்ப வராகவும் தனது சார்பாக எதையாவது சமூகத்துக்கு செய்து விடவேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்ட இளைஞர். தான் அறிந்த விடயங்களை பிறருடன் பகிர்ந்து கொள்வதிலும் தமது சமூகத்தின் மத்தியிலே படைப்பாற்றலை ஊக்கப்படுத்துவதிலும் முனைப்போடு செயற்படுபவர்.

கடந்த பத்தாண்டுகளாக கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்டுள்ள மேரா இதுவரை ஈழப்பித்தன், அரசையூரான், அரசையூர் மேரா, மாரிமகன் எனும் புனை பெயர்களிலும் கவிதை எழுதியுள்ளார். இவர் ஏற்கனவே கலங்கிய வானம் (2005), காலத்தின் காயங்கள் (2007) எனும் இரு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.

"மனக்காடு" என்பது இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு. இத் தொகுப்பிலே மொத்தமாக 33 கவிதைகள் காணப்படுகின்றன. இவை அனைத்துமே அன்றாட வாழ்க்கை அனுபவங்களை கவிதைகாளாக்கும் முயற்சியாகவே அமைந்திருக்கின்றன.

- கவிஞர் ராஜாத்தியின்
குறிப்பிலிருந்து

ISBN : 978-955-53621-1-5

**விலை ரூபா: 175/=**